Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 04 விலை ரூபா 4·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (18 - 01 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை 334

## போர் மூண்டது கொய்லருக்கு 1½ மணி நேரமாகத் தெரியாதாம்

(நியூயோர்க்)

வளைகுடாப் பகுதியில் யுத்தம் ஆரம்பித்ததை இட்டு ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் ஜாவியர் பெரஸ் டீ கொய்லரும் பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரும் தமது ஆழ்ந்த கவலையை தெரிவித்தனர்.

இதே வேளை போர் மூண்டு ஒன்றரை மணி நேரமாயும் அது பற்றிய தகவல் தனக்கு எட்டவில்லை என்றும் ஐ.நா செயலாளர் நாயகம் (4 ஆம் பக்கம் பார்க்க)

### பாரசீக வளைகுடாவில் நேற்று அதிகாலை ஈராக் மீது

# குறூஸ் ஏவுகணைத் தாக்குதலுடன் அமெரிக்கா போரை ஆரம்பித்தது

## ஈராக்-குவைத் மீது மூன்று மணிநேர குண்டுமாரி

(லண்டன்)

வளைகுடாவில் தரித்துள்ள அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பலில் இருந்து ஈராக்மீது ஏவப்பட்ட குறூஸ் ஏவுகணைத் தாக்குதலுடன் வளைகுடாப் போரை அமெரிக்கா ஆரம்பித்து வைத்தது.

சவூதிஅரேபியா நிலைகளிலிருந்தும், விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்தும் அலை அலையாகப் புறப்பட்ட விமானங்கள் தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலங்கள் முதல் தாக்குதலை ஈராக் மீதும் குவைத் மீதும் மேற்கொண்டன.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விடுத்திருந்த ஜனவரி 15 காலக்கெடு முடிந்து 19 மணித்தியாலங்களுக்குப் பின் இலங்கை நேரப் படி நேற்று அதிகாலை 4-30 மணியளவில் அமெரிக்கா தலைமையிலானபன்னாட்டுப்படை ஈராக்கில் உள்ள முக்கிய நிலைகளின் மீது வான் தாக்குதலை மேற்கொண்டது.

இந்த முதல் தாக்குதல் மூன்று மணித்தியாலம் நடத்தப்பட்டது. இரண்டாவது தாக்குதல் இலங்கை நேரப்படி பகல்12.30க்குநடத்தப்பட்டது

விமானப்படையின் இடைத் தாக்குதல்கள் 60 இலக்குகள் மீது 1000தடைவைகள் தாக்குதல்மேற்கொண்டதாக அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. அமெரிக்கத் தரப்புத் தகவல்களின்படி ஈராக் விமானப்படை (4 ஆம் பக்கம் பார்க்க)

### தரையிலிருந்து தரையைத் தாக்கும்

## ஷெல் தாக்குதல்

(கட்டுவன்)

கட்டுவனில் உள்ள சிறிலங்கா இராணுவ மினிமுகாமில் இருந்து நேற்று முந்தினம் காலை 11.00 மணியளவில் குடிமக்களின் குடியிருப்புக்களை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. (ஈ)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

### ஊர்காவற்றுறையில்

## புலிகள் இராணுவம் இரு மணிநேர மோதல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் முகாமில் இருந்து வெளியேறிய சமயம் புலிகள் நடாத்திய எதிர்த் தாக்குதலினால் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் மேற்படி முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினரை முருகமூர்த்தி கோவிலடியில் வைத்து விடுதலைப் புலிகள் தற்காப்புக்காக எதிர் கொண்டு கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற இம் மோதலின் பின் இராணுவத்தினர் அப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தேடுதலில் ஈடுபட்ட இராணுவம்

பின் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 4-30 மணி யளவில் அமெரிக்கா தலை மையிலானபன்னாட்டுப்படை

மூன்று மணித்தியாலம் நடத் தப்பட்டது. இரண்டாவது தாக்குதல் இலங்கை நேரப்படி பகல் 12.30க்கு நடத்தப்பட்டது

வட்டாரங்கள் தெரிவித் தன. அமெரிக்கத் தரப்புத் தகவல்களின் படி ஈராக் விமானப்படை

(4ஆம் பக்கம் பார்க்க)

தரையிலிருந்து தரையைத் தாக்கும்

# ஹட் ஏவுகணைத் தாக்குதலுடன் ஈராக் பதிலடி ஆரம்பம்

தரையில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் பாவ வல்ல ஹட் ஐந்து ஏவுகணை களைசவூதிஅரேபியாவின் மீது ஏவிவிருந்ததின் மூலம் ஈராக் முதலாவது தனது பதிலடி யைக் கொடுத்துள்ளது.

சவூதி அரேபியாவின் எல் கலப்பட்டின ஈன ஹப்சிஞ் அருகே அமைந்துள்ள எண் ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை இந்த ஏவுகணைகள் தாக்கியதால் அது எரிவ தாக செய்திகள்கூறுகின்றன.

சவூதிஅரேபியாவின் தலைநக ரான அல் றியாட்டின்அருகே இந்த ஏவுகணை ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகஅமெ ரிக்க தரப்பு தெரிவிக்கின்றது. அமெரிக்காவும், அதன் நேச தேசநாடுகளும் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராகவே இந்தப் பதிலடி கொடுக்கப் பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## "யுத்தங்களுக்கெல்லாம் தாயான யுத்தம் ஆரம்பம்"

### - சதாம் ஹுசைன்

"யுத்தங்களுக்கெல்லாம் தாயான யுத்தம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது" என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசையின் செய்திலை பக் தாத் வானொலி ஒலிபரப்பி யது, திருக்குர்ஆனிலிருந்தும் பல மேற்கோள் வாசகங்கள் ஒலிபரப்பப்பட்டன.

அமெரிக்காவின் தலைமை யிலான படைகள் குவைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாக்தாத் வீதியில் சதாம் ஹுசைன்

ஈராக்மீதுபோர் தொடுக்கப் பட்டதன் பின் ஈராக் ஜனாதி பதி சதாம் ஹுசைன் எங்கிருக் கிறார் எனத் தெரியவில்லை என அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்த அதேவேளையில் முதலாம் முறை விமானத்தாக்குதல் நடைபெற்ற பின்னர் சதாம் ஹுசைன் பாக்தாத்வீதிகளில் காணப்பட்டதாக வெரித் தாலி வானொலி அறிவித்தது.

## பிரதான இலக்குகளாக ஹட் ஏவுகணைத் தளங்கள்

(வாஷிங்டன்)

ஈராக் மீதான முதலாவது தாக்குதலில் அமெரிக்காவின் நேச அணியினரின் தாக்குதல் இலக்கு ஈராக்கினுடைய ஹட் ஏவுகணைத் தளங் களையும், விமானப்படைக ளையும், தொலைத் தொட ர்பு, ராடர் நிலையங்களை யும் அழிப்பதாகவே இருந்தது என பாதுகாப்பு வட்டாரங் கள் தெரிவித்தன.

அதேவேளை முதலாவது தாக்குதல் 80 சதவீதம் பூர்த் தியானதாக அமெரிக்க பாது காப்பு வட்டாரங்கள் தெரி வித்தன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 14 விமானங்களை வீழ்த்தியதாக பாக்தாத் அறிவிப்பு

(லண்டன்)

ஈராக்மீது தாக்குதல் மேற் கொண்ட பதினான்கு போர் விமானங்களைத் தாம் சுட்டு வீழ்த்தியதாக பாக்தாத் அறி வித்துள்ளது.

அதேவேளை ஈராக் மீது தாக்குதல் தொடுத்த சகல விமானங்களும் பாதுகாப்பா கத் திரும்பிவிட்டதாக அமெ ரிக்க இராணுவத் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

ஆனால் ஈராக் மீது தாக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

(4ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# தேடுதலில் ஈடுபட்ட இராணுவம் புலிகள் பல இடத்தில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் பல்வேறு பகுதிகளில் ரோந்து மற்றும் தேடுதல் நட வடிக்கைகளில் ஈடுபட்ட சிறி லங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடை யில் பலத்தமோதல்கள் இடம் பெற்றுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை செங்கலடி, கொம்மாந்துறை ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தி னருக்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையில் உவத்தப் பாலம், மயிலவெட்டுவான் ஆகிய இடங்களில் கடும் மோதல் இடம்பெற்றது. மறுதான் திங்கட்கிழமை பெரிய மியாங்குளம், சின்ன மியாங் குளம் ஆகிய பகுதிகளில்தேடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### மட்டக்களப்பில் இருவர்

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட குடாவெட்டை, பெருமாள் வெளிப்பகுதியில் இடம் பெற்ற இராணுவத்தினருட னான மோதலில் லெப். ஜனா தால் வீர மரணம் அடைந் தார்.

கடந்த திங்கட்கிழமை மயிலவெட்டுவான் ஆற்றைக் கடக்கும்போது நிதன் நீரில் மூழ்கி மரணம் ஆனார்.

### திருமலையில் நால்வர்

பைரவன் (பி. பாஸ்கரன்), மாயவன் (நா. புவிதராசா), சாலமன் (மா. இராசலிங்கம்), குருவேல் (கண்ணன்) ஆகி யோர் கடந்த புதன்கிழமை திருக்கோணமலையில் இரா ணுவத்தினருடனான மோத லில் வீர மரணமடைந்தனர். இவர்கள் அனைவருக்கும் விடு தலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ள னர்.

## திருமலையில் இருமோதல்களில் நான்குபோராளிகள் வீரமரணம்

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள வில்கம் விகாரை சிறி லங்கா இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இரா ணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த மோதல் பல மணி நேரம் நீடித்தது.

இதேதினம் இரவு 11-30 மணியளவில் "ஐனோயா" என்னும் இடத்தில் இராணு வத்தினருக்கும் விடுதலைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்காசிறி' வலைப்பாட்டில் பொருள்கள் இறக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் பருத்தித் துறையில் உணவுப் பொருள் களை இறக்குவதில் தாமதம் காட்டுவதால் விரைவில் வட பகுதிக்கு வரும் லங்காசிறி கப்பலை வலைப்பாடுப்பகுதி யில் உணவுப் பொருள்களை இறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என சம்பந் தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும், வலைப்பாடு துறை தற்போது திருத்தி அமைக்கப்பட்டு முடியும் நிலைக்கு வந்துவிட்டது. பருத்தித்துறையில் அலை மோதுவது அதிகமாக இருப் பதால் உணவு இறக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## லொறி மோதி இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதான வீதி வழியாக சென்று கொண்டி ருந்த இளைஞர் ஒருவரை லொறிமோதியதில் இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம் பெற்ற இவ்விபத்தில் வி. ஜெயசங்கர் (வயது 24) என்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**Second Handbook House**

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன் உறை, பித்தளை, செம்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, முரசோலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம்.

(B-1853)


## கோப்பாய் கலாசாலையில் விரிவுரையாளர் பற்றாக்குறை

(நல்லூர்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மொத்தம் ஏழு விரிவுரையாளர்கள் இளைப்பாறியுள்ளனர். இதனால் நடப்புக்கல்வியாண்டில் அங்கு விரிவுரையாளர்களுக்கு பாரிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

திருமதி சி. கணேஸ், திருமதி எஸ். பரமநாதன், திருமதி எஸ் இராமநாதன், திருவாளர்கள் எஸ். அன்ரனி, சே. குமரேசன், ஆர். கணபதிப்பிள்ளை, எஸ். வீரமணி ஐயர் ஆகியோரே இளைப்பாறிய விரிவுரையாளர்களாவர். இவர்கள் வாரமொன்றுக்கு தலா இருபது பாடவேளைகள் கற்பித்தார்கள். ஆகவே வாரத்துக்கு மொத்தம் 140 பாடவேளைகள் நடைபெறாது போகக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாம்.

இதேவேளை மேற்படி கலாசாலையில் 1990 இல் இறுதி ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றி வெளியேறியவர்களை விட நான்கு மடங்கு அதிகமான ஆசிரியர்கள் 1991 ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்போது கைவசமுள்ள விரிவுரையாளர்களை வைத்துக் கொண்டு கற்பித்தல் வேலைகளைச் சமாளிக்க முடியாது என்றும், தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களை உடனடியாக நியமித்துப் பற்றாக்குறையைநிவர்த்திசெய்யுமாறு கலாசாலை அதிபர் வி. கே. சிவப்பிரகாசம் கல்வி, உயர் கல்வி அமைச்சு ஆசிரியர் பிரிவு பிரதம ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### சரோஜினிதேவி கிருஷ்ணசாமி

16-01-91 அன்று சிவபதமடைந்தார்.

இவர் புங்குடுதீவு பொன்னாந்தோட்டம் 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது 854 ஆம் இலக்கம் கே. கே. எஸ் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், திரு. த. கிருஷ்ணசாமியின் (பிரபல வர்த்தகர், கொழும்பு) பாசமிகு அன்பு மனைவியும், செல்வன் இளகுமார் (லண்டன்) செல்வன் ஜீவகுமார் (கனடா), செல்வன் விஜயகுமார் (லண்டன்) செல்வன் ரூபகுமார் (யாழ். இந்துக்கல்லூரி), செல்விகள் நளாயினி, நிஷாயினி, சங்கீதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சு. ஆறுமுகம் காலஞ்சென்ற பூரணம் தம்பதிகளின் அருந்தவப் புதல்வியும், காலஞ்சென்ற திரு. அ. துரைச்சாமி (விஜயா ரேடிங் கொம்பனி, கொழும்பு), திரு. ஆ. கனகலிங்கம் (சுகந்தா ரேடர், கொழும்பு) திரு. ஆ. விஜயரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும், திரு. த. தர்மலிங்கம் (இளைப்பாறிய தபாலக உத்தியோகத்தர்), காலஞ்சென்ற திருமதி க. சுப்பையா சிவகாமிப்பிள்ளையின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுகிழமை(20-01-91) காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக கோம்பயன்மணலயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்துஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்
த. கிருஷ்ணசாமி
854, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(R-1042)


**DHL WORLDWIDE EXPRESS**

## வெளிநாட்டுக் கடிதங்கள்

உடனுக்குடன்
சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே
தபாலில் சேர்க்கப்படும்.

குறைந்த கட்டணம் ரூபா 20-00

விபரங்களுக்கு:

Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(B-1825)


## பதவி வெற்றிடம்

### பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து) பருத்தித்துறை.

### பொதுமுகாமையாளர் - 101:7

மேற்படி சங்கத்தின் மேற்குறிப்பிட்ட பதவிக்கு கீழ் வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை என்னும் விலாசத்திற்கு தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் இடப்பட்டு 1991. 01. 25ஆம் திகதி பகல் 12. 00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும்.

(விண்ணப்பப்படிவங்களை எமது சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

1. வயது :- 25க்கும்40க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.
(கூட்டுறவுச்சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

2. கல்வித்தகைமைகள்:

அ. கூட்டுறவுப்பணியாளரின் 08ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்தில் 03வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின்09 ஆவதுசம்பளத்திட்டத்தில்மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

"அல்லது"

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்பஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

"அல்லது"

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்பிரிவு தராதரப் பத்திரம் அல்லது க.பொ.த உயர்தரத்தில் வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

3. சம்பளம்:- ரூபா. 1105—ரூபா. 2170/-
60X4—75X11

4. பிணை:- ரொக்கம் ரூபா. 3000/-
ஆதனம் 5000/- செலுத்துதல் வேண்டும்.

குறிப்பு:

1. சமீபத்தில்பெற்றஇருநற்சான்றுப்பத்திரங்களினதும், கல்விச்சான்றிதழ்களினதும் அனுபவச்சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களினதுப் போட்டோப்பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
2. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போரின் தகைமையுடையவர்களுக்கு 1991.02.01 முற்பகல் 10. 00மணிக்கு நேர்முகப்பரீட்சை எமது சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

தலைவர்,
பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்.
பருத்தித்துறை.
1991. 01 12.

(B/1868)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

### வீரத்தின் விளை நிலமே!

## 91 ஆம் நாள் நினைவஞ்சலி



தாரணியில்:

## நினைவு கூருகின்றோம்!

91 ஆம் நாள் நினைவஞ்சலி



தாரணியில்:

6. 9. 1968

தமிழ் மண்ணுக்காய்

19. 10. 1990

களம் பல கண்ட களப்புலி

**வீரவேங்கை அனுஷன் அவர்கள்**

**(கிருஷ்ணன்-தங்கவேலு, குரும்பசிட்டி)**

19 - 10 - 90இல் கட்டுவனில் நடைபெற்ற
நேரடிமோதலில் வீரமரணமடைந்த
வீரவேங்கை அனுஷனே!

தமிழீழ மண்ணுக்காய் தரணியிலே போராடி கட்டுவன் பகுதியிலே சிறிலங்கா இராணுவத்துடன் சீற்றம் கொண்டு போராடி வீரவேங்கையாய் விண்ணுலகம் சென்றனையோ? எமது தாயக மண்ணுக்காய் ஆயுதம் ஏந்திப் போராடிய அனுஷனே! நீர் எங்கு தான் சென்றனையோ? உள்ளம் கொதிக்குதையா! உயிர் உள்ள வரை உன் பெயர் நிலைத்திருக்கும்; நீ மறைந்து விட்டாலும் உன் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு என்றென்றும் மறையாது. தமிழ் மண்ணுக்காய் மரணித்தாய்! தமிழினம் உன்னை மறக்குமா தம்பி.

வவுணத்தம்ப வீதி,
குரும்பசிட்டி,
தெல்லிப்பளை.

உன் பிரிவால் வாடும்
தாய், தந்தை, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

(B/1866)

# 31ஆவது நாள் நினைவஞ்சலி

## வீரத்தின் விளை நிலமே!
## தமிழாரத்தின் அணிகலமே!!

மலர்ந்தது
16
-
12
-
1974



மறைந்தது
19
-
12
-
1990

## செல்வி பிலிப் றெக்சியா
**(வீரவேங்கை - ஜெனோவா)**

மதம் கொண்ட யானையின் பலம்
கொண்டு மோதும் - உன்
திறன் கண்டு வேங்கைகள் பகை
ஓட சாடும் - படைக்
கலம் கொண்ட பாவை நீ
பலியான போதும் - தமிழ்
நிலம் என்றும் எமக்கென்று
சங்கொன்று ஊதும்!

191/3 கடற்கரை வீதி,
பாஷையூர்-யாழ்ப்பாணம்.
(R-1040)

உனது பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரசகோதரிகள்
அங்கிள்மார், அன்ரிமார்
உறவினர்கள்.

பருத்தித்துறை.
1991. 01. 12.
(B/1868)

# நினைவு கூருகின்றோம்!

## தை 18

1987ஆம் ஆண்டு கதிரவெளிப்பகுதியில்
ஶ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலில்
வீரமரணமடைந்த

**லெப். இந்திரன்** (இ. கோணேஸ்வரன் கட்டைபறிச்சான்)

**2ஆம் லெப். ரஜனி** (ச. உதயராசா -சம்பூர்)

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**2ஆம் லெப். ரகு** (ஆ. அமிர்தலிங்கம்)

கண்டிக்குளம் நல்ல தண்ணீர்த்தொடுவாயில்
வீரமரணமடைந்த

**மாதவன்**

ஆகியோரை இந்நாளில் நினைவுகூருகின்றோம்

நீங்கள் சிந்திய இரத்தத் துளிகள்
புது வரலாறு எழுதும் புதுமைத்துளிகள்!
நீங்கள் நடந்த காலடித் தடங்கள்!
இந்த மண்ணின் காவலரண்கள்!
நீங்கள் தாங்கியிருந்த போர்க்கருவிகள்
விடியலுக்கு இசைபாடி இன்னும் முழங்கும்!
தங்கத் தமிழீழம் மலர்வதற்கே
தந்தீர் விலையாய் உயிர்களையே!

**- விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B-1871)

★ சிந்தனைக்கு ★

தன்னம்பிக்கையே, வெற்றியின் அடிப்படை இரகசியம்
— ரால்ஃப் வால்டோ எமெர்சன்


# ஈழநாதம்

31, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம். 18-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ.எண் 05


## மேற்குலகின் நலனுக்காக அரபுலகில் யுத்தம்

ஐ.நா. சபை குவைத்தை விட்டு ஈராக் வெளியேற விதித்த காலக்கெடு முடிவடைந்து பத்தொன்பது மணித்தியாலங்களின் பின்னர் வளைகுடாவில் பெரும் போர் ஆரம்பித்துவிட்டது. நேற்று அதிகாலையில் இருந்து அமெரிக்க அணியினர் ஈராக் மீதும் குவைத் மீதும் தாக்குதலை ஆரம்பித்தனர். போர் ஆரம்பித்து மூன்று மணித்தியாலத்திற்குள்ளேயே 18,000 மெற் தொன் வெடிப்பொருள்கள் ஈராக் - குவைத் மீது அமெரிக்க அணியினரால் வீசப்பட்டுவிட்டன.

இந்தப் போர் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் எனத் திட்டவட்டமாகக்கூற முடியாவிட்டாலும் வாரக்கணக்கில் நீடிக்கும் என்பது மட்டும் உண்மை. அத்தோடு இந்தப் போரில் எத்தனை நாடுகள் பங்குகொள்ளும் என்பது திட்டவட்டமாகக்கூற முடியாவிட்டாலும் சகலகண்டங்களிலும் உள்ள நாடுகள் பங்கு பற்றும் போர் என்பது மட்டும் உண்மை. ஈராக் - குவைத் மீதான முதலாவது விமானத் தாக்குதலில் அமெரிக்க, பிரிட்டன் சவூதி அரேபியா விமானங்கள் பங்கு பற்றின.

அதேவேளை வளைகுடாவில் உள்ள அரபுநாடுகளும், மத்திய கிழக்கு நாடுகளும் இந்தப் போரில் வலிந்து இழுத்துவிடப்படலாம் என்றும் தெரிகின்றது.

இந்தப் போரின் முடிவுகள் பெரும்பாலும் உணரப்பட்டவையாகவே உள்ளன. பெரும் அழிவின் பின் குவைத்தை விட்டு ஈராக் வெளியேறுவது தவிர்க்க முடியாததாகிவிடும். சிலவேளைகளில் ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைன் ஆட்சியே கேள்விக்குரியதாக ஆகிவிடக் கூடும். ஆனால் இந்தப் போர் அரபுக்களைப் பொறுத்த அளவில் பெரிதும் சிந்தனையைத் தூண்டும் போராகவே இருக்கும். ஏனெனில் மேற்கத்தைய அரசுகளினால் அரபுகளுக்கு வழங்கப்படும் இரண்டாவது அடி இதுவாகும்.

1956 ஆம் ஆண்டும் சுயஸ் கால்வாய் தொடர்பாக பிரச்சினையில் மேற்கு நாடுகள் இவ்வாறாகத்தான் அணிதிரண்டு எகிப்தை எதிர்த்தன. அரபுகளுக்கு தலைமைத்துவம் கொடுக்க அன்று எகிப்து முற்பட்டபோது இது நடந்தது. இன்றுபோல் அன்றும் இஸ்ரேலும் இவர்களுடன் சேர்ந்து கொண்டது.

இதுபோன்றே இன்றும் மேற்குலகம் அரபுகளுக்கு தலைமைத்துவம் என்ற ரீதியில் தன்னைக் கட்டி வளர்க்க முற்பட்ட சதாம் ஹூசைனை அழித்துவிடப்

## தாரீக் அஸீஸினால் நிராகரிக்கப்பட்ட ஜோர்ஜ் புஷ்சின் கடிதம்

ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைனுக்கு அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் பேகர் மூலம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அனுப்பி வைத்த இறுதி எச்சரிக்கைக் கடிதம்.

ஜனாதிபதி அவர்களே!

உலகுக்கும் ஈராக்கிற்கும் இடையேயானபோரின் விளிம்பில் இன்று நாம் நிற்கின்றோம், குவைத் மீதான உங்களின் ஆக்கிரமிப்பை அடுத்தே இந்தப் போர் நெருக்கடி ஆரம்பமானது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 678 ஆம் தீர்மானத்துக்கு முற்று முழுதாகவும் நிபந்தனையற்ற முறையிலும் ஈராக் இணங்குவதன் மூலம் மாத்திரமே இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவரலாம்.

நான் உங்களுக்கு இப்போது நேரடியாகவே எழுதுகிறேன்; ஏனென்றால் ஈராக் மக்களுக்கு ஏற்படக்கூடிய அனர்த்தத்தை தவிர்ப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தத் தவறக்கூடாது.

ஈராக் எந்தளவு தூரம் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது; அதன் விளைவாக ஈராக் முகம் கொடுக்கப்போகும் நெருக்கடிகள் எவை என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லையென என்னிடம் சிலர் கூறியதன் காரணத்தாலும் இக்கடிதத்தை நான் உங்களுக்கு எழுதுகின்றேன். அவ்வாறு அவர்கள் கருதியது சரியானதா இல்லையா என்பதை அனுமானிக்கக் கூடிய நிலையில் நான் இப்போது இல்லை எனவே நான் இக்கடிதத்தில் செய்யக் கூடியதெல்லாம் இராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேகர் உங்களது வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸிடம் கூறியவற்றை மீண்டும் வலியுறுத்துவதும் நாம் எங்கே நிற்கிறோம், எதற்குத் தயாராகிறோம் என்பதைப் பற்றி உங்கள் மனதில் இருக்கக்கூடிய நிச்சயமற்ற தன்மையை அல்லது விளங்காத நிலையை இல்லாதொழிப்பதற்கு முயற்சி செய்வதுமேயாகும்.

குவைத்தின் சகல பகுதிகளில் இருந்தும் நிபந்தனையும் தாமதமும் இன்றி ஈராக் விலக வேண்டும் என ஒருமித்து சர்வதேச சமூகம் ஒன்று பட்டு நிற்கிறது. இது வெறுமனே அமெரிக்காவின் கொள்கை அல்ல. பாதுகாப்புச் சபையின் 12 தீர்மானங்களிலே வெளிப்படுத்தப் பட்டது.

அமெரிக்காவை அதன் கூட்டணி பங்காளிகளிடம் இருந்து பிரிக்க முடியாது. ஐ.நா. பாதுகாப்புச்சபை 12 தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறது. அத்தீர்மானங்களை அமுல் செய்வதற்குதவியாக 28 நாடுகள் இராணுவப் பிரிவுகளை வழங்கியிருக்கின்றன. நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்கங்கள் பொருளாதாரத்தடைகளை விதித்துள்ளன.

இவையெல்லாம் அமெரிக்காவிற்கு எதிராக ஈராக் இருக்கின்றது என்பதையல்ல ஈராக் முழு உலகுக்கும் எதிராக இருக்கின்றது என்பதையே வெளிக்காட்டுகின்றன.

பெரும்பாலான அரபு மற்றும் முஸ்லிம் நாடுகள் உங்களுக்கு எதிராக அணிதிரண்டு நிற்கின்றமையும் நான் கூறுகின்றதை மேலும் புரியவைக்கும் என நம்புகிறேன்.

ஈராக் குவைத்தைத் தொடர்ந்து வைத்திருக்கப் போவதில்லை; வைத்திருக்கவும் முடியாது. வாபஸாகுமிடத்து அதற்கான விலையையும் பெறப்போவதில்லை.

அமெரிக்கா ஜனநாயகத்தில் உள்ள 'வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கான சுதந்திரத்தில், நீங்கள் தேறுதல் அடைய முனையக்கூடும். அத்தகைய உணர்வுகளால் நீங்கள் தூண்டப்படக்கூடாது. பல்வேறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கின்ற ஆரோக்கியமான தன்மையை பிளவு -பிரிவினையுடன் தொடர்பு படுத்திக் குழப்பநிலைக்குள்ளாகக்கூடாது. உங்களுக்கு முன்னர் வேறு ஆட்கள் செய்ததைப்போல் அமெரிக்காவின் உறுதிப்பாட்டைக்

தில்லை என்பதையும் உங்களுக்கு நான் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

மேலும் அமெரிக்காவின் கூட்டணியில் உள்ள எந்தவொரு உறுப்பு நாட்டுக்கு எதிராகவும் மேற் கொள்ளப்படக்கூடிய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நீங்களே நேரடியாகப் பொறுப்பு என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன். சாத்தியமான, கடுமையான பதிலைக் கொடுக்க

மாறுதான் அமெரிக்க மக்கள் கோருவர். பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு முன்யோசனையற்ற உத்தரவுகளை நீங்கள் கொடுப்பீர்களேயானால் அதற்காக நீங்களும் உங்கள் நாடும் பயங்கரமான விலையைச் செலுத்த வேண்டி வரும் என்பதை மனதிலிருத்திக் கொள்ளுங்கள்.

உங்களை அச்சுறுத்துவதற்காகவல்ல விடயங்களை அறிவிப்பதற்காகவே இக்கடிதத்தை எழுதுகிறேன். நான் இதை மனத்திருப்தியுடன் செய்யவில்லை. ஏனென்றால் அமெரிக்க மக்களுக்கும் ஈராக்கிய மக்களுக்கும் இடையே எந்தவித சச்சரவும் இல்லை.

ஜனாதிபதி அவர்களே, இவ்வருடம் ஜனவரி 15க்கு முன்னதான காலகட்டம்தான் நல்லெண்ணத்துக்கான வேளையென்றும் மேலும் வன்முறையின்றி நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நாட்கள் என்றும் ஐ. நா பாதுகாப்புச்சபையின் 678 ஆம் தீர்மானம் குறித்துரைக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டவாறு இந்த நல்லெண்ண காலகட்டத்தை பயன்படுத்துவதா

அணிதிரண்டு எகிப்தை எதிர்த்தன. அரபுகளுக்கு தலைமைத்துவம் கொடுக்க அன்று எகிப்து முற்பட்டபோது இது நடந்தது. இன்றுபோல் அன்றும் இஸ்ரேலும் இவர்களுடன் சேர்ந்து கொண்டது.

இதுபோன்றே இன்றும் மேற்குலகம் அரபுகளுக்கு தலைமைத்துவம் என்ற ரீதியில் தன்னைக் கட்டி வளர்க்க முற்பட்ட சதாம் ஹுசைனை அழித்துவிடப் பார்க்கின்றது. அதாவது வளைகுடா, மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்க நலனுக்கு அச்சுறுத்தலாக மாறக்கூடிய அரபுலகத் தலைமையை அமெரிக்கா அழித்துவிட எண்ணுகின்றது. அதாவது அரபுக்களுக்காக என்று கூறிக் கொண்டே அரபுக்களை அழிக்கும் திட்டம் இதுவாகும்.

இதனை அரபுக்களும் ஓரளவு இன்றுஉணர்ந்துள்ளனர். ஜோர்டானிய இளவரசரின் இரு தினங்களுக்கு முன்னைய பேட்டியும் வெளிக்காட்டுகின்றது. 25வருடங்களுக்கு மேலாக பாலஸ்தீனியர்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதைப் பார்த்துக்கொண்டிருந்த மேற்குலகம் தற்பொழுது ஈராக்கிற்கெதிரான நடவடிக்கையில் இவ்வளவு தீவிரம் காட்டுவது ஏன் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இப் போரானது எதிர்காலத்தில் உலகை மேலும் ஒரு நெருக்கடிக்கு இட்டுச் செல்லுமே ஒழிய ஒரு போதும் அமைதிக்கு வழிவகுக்காது.

முதலாம் உலக யுத்தம் முடிந்தபோது 1918 இல் கூடிய வேர்சைஸ் மாநாட்டில் யுத்தத்தில் தோல்வியுற்ற ஜேர்மனிக்கு பெரும் அநீதிகள் இழைக்கப்பட்டன. பெருந்தொகை நஷ்ட ஈடுகள் பெறப்பட்டன. இதன் காரணமாக மீண்டும் ஜேர்மனி வளர்ச்சி அடைந்தபோது பழிவாங்கத் துடித்தது. இதனால் இரண்டாம் உலக மகாயுத்தமும் நடைபெற்றது.

இதேபோன்றதொரு நிலையையே இன்று அரபுலகில் அமெரிக்கா தோற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா இன்று தமது நலனுக்காக வளைகுடாவிலோ மத்திய கிழக்கிலோ ஓர் அரபுத் தலைமையை வளர விடாமல் தடுத்தல் என்பது எதிர்காலத்தில் இந்தப் பிராந்தியத்தில் இருந்து அமெரிக்கா நலனை முற்று முழுதாக துடைத்தெறியக் கூடியதாகும்.

தற்பொழுதே அமெரிக்க எதிர்ப்பு இஸ்லாமிய உலகில் குறிப்பிடக்கூடிய அளவில் பரவியுள்ளது. இந்த நிலையில் அமெரிக்காவின் இந்தத் தொடர்ச்சியான செயற்பாடு அரபுலகில் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

அதேவேளை, இன்று மூண்டிருக்கும் வளைகுடா யுத்தமானது வல்லரசுக்களின் கெடுபிடி யுத்தம் முடிவடைந்ததின் வெளிப்பாடானதா எனவும் சிந்திக்க வைக்கின்றது அவ்வாறாயின் கடந்த காலத்தில் நிகழ்ந்த கெடுபிடி யுத்தங்கள் உலகின் மூன்றாம் உலகப் போர் ஒன்றைத் தடுத்து நிறுத்தியிருந்தனவா என்றும் எண்ணவைக்கின்றது

தாமதமும் இன்றி ஈராக் விலக வேண்டும் என ஒரே குரலில் சர்வதேச சமூகம் ஒன்றுபட்டு நிற்கிறது. இது வெறுமனே அமெரிக்காவின் கொள்கை அல்ல. பாதுகாப்புச் சபையின் 12 தீர்மானங்களிலே வெளிப்படுத்தப் பட்டது போல உலக சமுதாயத்தின் நிலைப்பாடாகும்.

சமாதான முடிவையே நாம் விரும்புகிறோம்; எவ்வாறெனினும் ஐ. நா பாதுகாப்புச் சபையின் 678 ஆம் தீர்மானத்துக்கு முற்றாக இணங்குவதற்கு குறைந்த எதுவும் அல்லது அத்தீர் மானத்துக்கு முந்திய தீர்மானங்களுக்கு இசையச் செயற்படுவதற்குக் குறைந்த எதுவும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்ல.

ஆக்கிரமிப்புக்கு விருது வழங்க முடியாது அது குறித்து பேச்சு வார்த்தையும் இருக்க முடியாதுகொள்கையும் கோட்பாடும் விட்டுக் கொடுக்க முடியாதவையாகும்.

எவ்வாறெனினும் முற்று முழுதாக இணங்கிச் செயற்படுவதன் மூலமாக ஈராக் மீண்டும் சர்வதேச சமுதாயத்தில் இணையும் வாய்ப்பைப் பெறும் ஈராக் இராணுவம் நிர்மூலம் செய்யப்படுவதில் இருந்தும் தப்பிக் கொள்ளலாம்.

ஆனால் குவைத்தில் இருந்து முற்று முழுதாக நிபந்தனை எதுவுமின்றி நீங்கள் விலகிக் கொள்ளாது விட்டால் குவைத்தை விடக் கூடுதலானதை நீங்கள் இழக்க வேண்டி வரும். குவைத்தின் எதிர்காலமல்ல, தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் விவகாரம்; அது விடுவிக்கப்படும் அதன் அரசாங்கம் மீண்டும் அதிகாரத்தில் அமர்த்தப்படும். சர்ச்சைக்குரியதாக உள்ளது ஈராக்கின் எதிர்காலமே. அது நீங்கள் தேர்ந்தெடுக்கும் வழியில்தான் தங்கியுள்ளது.

தெரிவிக்கின்ற ஆரோக்கியமான தன்மையை பிளவு-பிரிவினையுடன் தொடர்புபடுத்திக் குழப்பநிலைக்குள்ளாக்கக்கூடாது. உங்களுக்கு முன்னர் வேறு ஆட்கள் செய்ததைப்போல் அமெரிக்காவின் உறுதிப்பாட்டைக் குறைத்து மதிப்பிடவும் வேண்டாம்.

ஐ. நா. வினால் விதிக்கப்பட்ட கட்டாயத் தடைகளின் தாக்கத்தை ஈராக் இப்போது உணர்கின்றது. போர் மூளுமேயானால் உங்களுக்கும் உங்களது நாட்டுக்கும் அது பேரபாயமாகவும் பாரிய அனர்த்தமாகவும் அமையும். இரசாயன அல்லது உயிரியல் தாக்க ஆயுதங்களை பயன்படுத்துவதையோ, குவைத் எண்ணெய் வயல்கள், எண்ணெய் நிலைகளை நிர்மூலம் செய்வதையோ அமெரிக்கா பொறுத்துக் கொள்ளப்போவ

தொண்டுவருவதற்கான நாட்கள் என்றும் ஐ. நா பாதுகாப்புச்சபையின் 678 ஆம் தீர்மானம் குறித்துரைக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டவாறு இந்த நல்லெண்ண காலகட்டத்தை பயன்படுத்துவதா அல்லது மேலும் வன்முறைகளுக்கான முன்னோடிக்காலகட்டமாக அதை அமையவிடுவதா என்பதைத் தெரிவு செய்வது உங்கள் கைகளில் இருக்கிறது; உங்கள் கைகளில் மாத்திரமே இருக்கிறது என்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன்.

பெரும் பொறுப்பு உங்களில் தங்கியிருப்பதால் உங்கள் தெரிவை கவனமாகவும் விவேகத்துடனும் செய்வீர்களென எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்

ஜோர்ஜ் புஷ்.

தமிழக அரசை

# சந்திரசேகர் தகவலை வைத்து கலைக்கக் கோரினோம்

\- ராஜீவ்காந்தி

எதிர்க்கட்சித் தலைவர்கள் முன்னர் விடுதலைப் புலிகள் பற்றி லோக் சபையில் ஒப்புக் கொண்டவை பற்றி இப்பொழுது மௌனமாகி விட்டார்கள் என்று முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளரிடம தெரிவித்தார்.

மேலும், பிரதம மந்திரி சந்திரசேகர் லோக் சபையில் விடுதலைப் புலிகள் பற்றி உறுதியாக வெளியிட்ட தகவல்களைத் தொடர்ந்து, அதன் அடிப்படையில் இந்திரா காங்கிரஸ் கட்சி தமிழ் நாடு மாநில அரசைக் கலைக்குமாறு கோரி லோக் சபையில் அறிக்கை ஒன்றை விடுத்ததாகவும் ராஜீவ்காந்தி தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி இன்று டில்லி திரும்பவுள்ளார்.

## பயிற்சி

யாழ். மாவட்டத்தில் ஆண்களுக்குரிய உடைகளைத் தைப்பதற்கு பயிற்சி வகுப்பு ஒன்று யாழ். கல்வித்திணைக்கள முறைசாராப்பிரிவினால் நடாத்தப்பட்டுவருகிறது.

இன்னும்பலதொழிற்பயிற்சிகள் இதுபோல் இவ்வத்துறைகளில் கை தேர்ந்தவர்களால் நடாத்தப்பட்டுவருகிறது. (மு)

# முஸ்லிம் காடையர்களால் வவுனியாவில் கெடுபிடி

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் முஸ்லிம் காடையர் கும்பல் ஒன்றினால் தமிழ்ப் பொது மக்கள் பல கெடுபிடிகளை அனுபவித்து வருகின்றனர்.

பாவற்குளம் பகுதியைச் சேர்ந்த இக்கும்பல் தற்போது சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் வவுனியா நகரப் பகுதியில் நடமாடிய வண்ணம் தமிழ் இளைஞர்கள் பலரை கடத்துவதிலும் தமிழ் மக்களின் பொருள், மற்றும் பணம் ஆகியவற்றை சூறையாடுவதிலும் ஈடுபட்டு வருகின்றது.

மேற்படி காடையர் கும்பலிடம் அகப்பட்டு பொருள்களையும், பணத்தையும் பறிகொடுத்த நிலையில் தப்பி வந்த வ. சேதீஸ்வரன் என்னும் வாலிபர் தனக்கு நேர்ந்த கெடுபிடிகளை ஈழநாதம் நிருபரிடம் விபரித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி பொருள்கள் கொள்வனவு செய்து கொண்டு வருவதற்காக மருக்காரம்பளை என்னும் இடத்திலிருந்து நகரப்பகுதி சென்ற இவர், முஸ்லிம் காடையர் கும்பலினால் கைது செய்யப்பட்டு மிரட்டப்பட்டார்.

ரயர் போட்டு தன்னை உயிருடன் எரிக்கப் போவதாகவும், இராணுவத்திடம் ஒப்படைக்கப் போவதாகவும் காடையர் மிரட்டினர் என்றும், பொருள்களையும் பணத்தையும் இழந்த நிலையில், இராணுவ சோதனை முகாமில் வரிசையில் நின்ற போது மக்களிடையே மறைந்து தான் தப்பி வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி கும்பலினால் தன்னைப் போல் பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

---

**பிரதான**

மேலும் அவ்வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் இஸ்ரேலை இலக்குக் கொண்டிருந்த ஹட் - ஏவுகணைகள் நிலைகள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளது.

---

**யுத்தங்களுக்கு**

தை மீட்பதற்கும், ஈராக்கிய ஆயுதக் கிடங்குகளை அழிப்பதற்குமே வான்தாக்குதலை மேற்கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார். இதே வேளை வாஷிங்டனுக்கு முறையான பாடம் படிப்பிக்கப்படும் என்று சதாம் ஹுசையின் சூளுரைத்துள்ளார்.

பக்தாத் வானொலி நேற்றும் காலை இத்தாக்குதல் பற்றி முதன் முதலாக வெளியிட்ட செய்திக் குறிப்பில் அமெரிக்க ஜனாதிபதி இத்தாக்குதல்களுக்காகப் பின்னர் வருத்தப்படுவார் என்று கூறியுள்ளது. குவைத்தை ஒரு பெரும் போர்க்களமாக மாற்றினாலும் பக்தாத் வெற்றியடையும் என்று அச்செய்தி மேலும் தெரிவித்தது. இப்போதைய இந்தப் போர் ஏகாதிபத்தியத்தின் முடிவுக்கான ஆரம்பப் போர் என்றும் பக்தாத் வானொலி அறிவித்தது

---

**14 விமானங்களை**

தல் நடத்திய பன்னிரண்டு பிரெஞ்சுப் போர் விமானங்களில் நான்கு விமானங்களுக்குச் சேதமேற்பட்டதென்றும் இதிலொன்று மூற்றாகச் சேதம் அடைந்ததாகவும் பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பிரிட்டன் தனது போர் விமானம் ஒன்றை இழந்துள்ளதாக அறிவித்துள்ளது.

---

**ஹட் ஏவுகணை**

அமெரிக்காவும், அதன் நேசதேச அணிகளும் மேற்கொண்ட தாக்குதலால் இராணுவ நிலையங்களையும், அணுவாயுத மையங்களையும் தாக்க முடியவில்லை என்று ஈராக் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பக்தாதில் மிகப் பெரிய அழிவுகள் ஏதும் ஏற்படவில்லை என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் ஈராக்கிய தரப்பில் பெருமளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், இராணுவ மையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு இலாகா கூறியுள்ளது.

---

**லொறி மோதி**

வர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (க)

---

**லங்காசிறி**

தட்டுமைக்களை இறங்குதுறையுடன் அணைக்க முடியாது உள்ளது. இதனைத் தொடர்ந்து வலைப்பாடுதுறையின் தேவை அத்தியாவசியமாகி உள்ளதாகவும் கூறினார். (லோ)

---

**திருமலையில்**

புலிகளுக்கும் இடையில் இரண்டு மணிநேரம் வரையில் கடும் மோதல் இடம்பெற்றது.

இம் மோதல்களில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

இந்த இரு மோதல்களின் போது நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்

---

**தேடுதலில**

தல் நடாத்திய இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் மோதல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஆத்திரம் கொண்ட இராணுவத்தினர் இப்பகுதியில் இருந்த 185 பொதுமக்களின் குடியிருப்புக்களை தீயிட்டுக் கொழுத்தினர்.

மறுநாள் 9 ஆம் கட்டை என்னும் இடத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல்களின்போது புலிகளின் மிதி வெடிகளில் பல இராணுவத்தினர் சிக்கிக்கொண்டனர்.

இதேதினம் குடாவெட்டை கொமான் வெளி ஆகிய பகுதிகளிலும் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றது

---

# நேட்டோ அமைச்சர்கள் அமெரிக்காவிற்கு ஆதரவு

(லண்டன்)

வளைகுடாவில் அமெரிக்காவின் போர் நடவடிக்கைக்கு நேட்டோ அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் 16 வெளியுறவு அமைச்சர்கள் தமது ஒருமனதான ஆதரவை ஏகமனதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு தமது அணி நாடான துருக்கியைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள உறுதியளித்துள்ளனர்.

அதேவேளை சமாதானம் ஏற்பட சகல உதவிகளையும் தான் செய்யவுள்ளதாக ஜேர்மன் பிரதமந்திரி ஹெல்மற் கோல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இப் போர் தொடர்பாக யப்பான் கருத்து வெளியிடுகையில் இப்போரில் அமெரிக்காவிற்கான தார்மீக உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் தாம் வழங்குவதாக யப்பான் பிரதமர் அறிவித்துள்ளார்;

இதன் பிரகாரம் 4000 கோடி டொலர் அமெரிக்காவிற்கு உதவியாக யப்பான் வழங்கவுள்ளது.

# அமெரிக்காவில் துக்கம்; கெய்ரோவில் மகிழ்ச்சி

வளைகுடாவில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதை இட்டு அப்பகுதி மக்களின் உயிரிழப்பை சந்திக்க வேண்டி நேரிடும் என்பதை கருத்திற் கொண்டு அமெரிக்க மக்கள் முக்கிய நகரங்களான சன் பிரான்ஸிஸ்கோ, கலிபோர்னியா, வாஷிங்டன் போன்ற நகரங்களில் சோகமயமாக விம்மி விம்மி அழுதபடி வீதிகளில் செல்வதைக் காணக்கூடியதாக இருப்பதாக மேலைத்தேய செய்தி ஸ்தாபனங்கள் கூறின.

இதேவேளை குவைத் நாட்டு பிரஜைகள் எகிப்தின் தலைநகரான கெய்ரோ வீதிகளில் அமெரிக்க கொடிகளையும், குவைத் கொடிகளையும் குதூகலத்துடன் அசைத்து தமது மகிழ்ச்சி ஆரவாரத்தினை தெரிவித்துள்ளனர் எனவும் அவை தெரிவித்தன.

# போர் பரவாமல் தடுக்க ரஷ்யா கோரிக்கை

(மொஸ்கோ)

போர் ஏற்படுவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பு ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுடன் தொடர்பு கொண்டு குவைத்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு தான் கேட்டதாக ரஷ்யா அதிபர் கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தற்பொழுது போர் மற்றைய நாடுகளுக்கும் பரவாமல் தடுக்குமாறு ஐரோப்பிய நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளை இந்தியப்பிரதமர் சந்திரசேகர் ரஷ்யாவின் சமாதான முயற்சிக்கு தான் ஆதரவு தெரிவிப்பதாகவும், இணைந்து செயல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்போர் தொடர்பாக சீனா கருத்து வெளியிடுகையில் போரில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினரும் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுள்ளது.

# துருக்கியும் யுத்த பிரகடனம்

(அங்காரா)

துருக்கியும் ஈராக்கிற்கு எதிரான போர் பிரகடனம் செய்துள்ளது.

அதேவேளை கனடாதான் தேரில் ஈடுபடுவதா இல்லையா என்பதை தீர்மானிக்க பாராளுமன்றத்தைக் கூட்டியுள்ளது.

வளைகுடாவிற்கு தனது 100 இராணுவத்தினரை அனுப்பிவைத்துள்ள அர்ஜென்டீனாவும் போரில் ஈடுபடுவது குறித்து விவாதிக்க பாராளுமன்றத்தைக் கூட்டியுள்ளது.

வர் வருத்தப்படுவார் என்று கூறியுள்ளது. குவைத்தை ஒரு பெரும் போர்க்களமாக மாற்றினாலும் பக்தாத் வெற்றியடையும் என்று அச்செய்தி மேலும் தெரிவித்தது. இப்போதைய இந்தப் போர் ஏகாதிபத்தியத்தின் முடிவுக்கான ஆரம்பப் போர் என்று பக்தாத் வானொலி அறிவித்தது

பில் பெருமளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், இராணுவ மையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு இலாகா கூறியுள்ளது.

புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல்களின்போது புலிகளின் மிதி வெடிகளில் பல இராணுவத்தினர் சிக்கிக்கொண்டனர்.

இதேதினம் குடாவெட்டை மைமான் வெளி ஆகிய பகுதிகளிலும் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

மேற்படி மோதல்களில் இரு போராளிகள் வீர மரணமடைந்தனர்.

இராணுவத் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பற்றி தெரியவில்லை (ஈ)

### குறூஸ் ஏவுகணை எதிர்த் தாக்குதல் எதையும் மேற்கொள்ளவில்லையாம்

இந்த விமானப்படையின் தாக்குதலுடன் 100 குறூஸ் ஏவுகணைகளும் பயன்படுத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிகாலையில் அமெரிக்க யுத்தக் கப்பல்களிலிருந்து குறூஸ் ஏவுகணைத் தாக்குதலுடன் பாலைவனப் புயல் (Operation Desert Storm) என்ற ஈராக்கிற்கு எதிரான யுத்த நடவடிக்கை ஆரம்பமானது.

அமெரிக்க, சவுதி அரேபிய, பிரிட்டிஷ், குவைத் வான்படை விமானங்கள் பக்தாத்தையும், பெயர் வெளியிடப்படாத மற்ற இலக்குகளையும் தாக்கின 'இடிமின்னல்வேகத் தாக்குதல்' என்று அமெரிக்க அணியினரால் வர்ணிக்கப்படும் இத்தாக்குதலின் போது பக்தாத் நகரின் மீதும் வேறு சில இலக்குகள் மீதும் அலை அலையாக வந்த விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்தன. குண்டுவீச்சு விமானங்கள் பாதுகாப்பாகத் திரும்பியதாக மேற்கத்தைய தரப்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிகாலைத் தாக்குதலின்போது மட்டும் 18,000 தொன் எடையுள்ள குண்டுகள் வீசப்பட்டன இது இரண்டாவது உலகயுத்தத்தின்போது அமெரிக்கா ஹிரோசிமாவில் போட்ட குண்டுக்குச் சமமானதென்று இராணுவ தரப்பில் சொல்லப்படுகிறது.

அமெரிக்க நேசதேசப்படைகளின் இலக்கு சதாம் ஹுசைன் அல்ல. ஈராக்கின் இராணுவ அமைப்புக் கட்டுமானத்தையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும், இராணுவ தலைமைத்துவத்தையும், எண்ணெய் வயல்களையும் நிர்மூலமாக்குவதுதான் நேசதேசப் படைகளின் நோக்கமாகும் என்று பென்ரக்கன் தெரிவித்தது.

மேலும் தாம் எதிர்பார்த்ததைவிட அனுகூலமான பயனை இத்தாக்குதல் தந்திருப்பதாகவும் பென்ரக்கன் தெரிவித்துள்ளது.

விமானக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்ச்சியாகப் பத்து நாட்கள் நீடிக்கலாம் என்று அமெரிக்க பாதுகாப்புத் திணைக்கள வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. வான் தாக்குதலுக்கான ஒரு காலக்கெடுவை அறிவிக்க அமெரிக்க நேச தேசங்களின் படைத் தளபதி ஜெனரல்கள் மறுத்துவிட்டனர்.

ஈராக் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கான ஒப்புதலை அமெரிக்க ஜனாதிபதி முன்னரே வழங்கியிருந்தாராம். கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி புஷ் யுத்தப் பிரகடனத்துக்குக் கையெழுத்து வழங்கியுள்ளார் என்று அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### போர் மூண்டது

தெரிவித்ததோடு போர் மூளாமல் தடுக்க உலகத் தலைவர்கள் எடுத்த முயற்சிகள் வீணாகிப்போய் விட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் யுத்தத்தை தவிர்த்து இருபகுதியினரும் உடனடியாக பேச்சு நிலைக்குவர வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதேவேளை வளைகுடாவில் போர் மூண்டதைத் தொடர்ந்து நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டக்காரர் ஐ.நா. செயலகத்தை நோக்கி முன்னேறினார்கள் இவர்களைப் பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தியதோடு மேற்படி செயலகத்துக்கான பாதைகளையும் முடக்கினார்கள்.

### புலிகள்

பகுதியில் இருந்த குடிமக்களின் வீடு ஒன்றை குண்டு வைத்து தகர்த்துவிட்டு பின்வாங்கிச் சென்றனர்.

இந்த மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

முகாம் திரும்பிய இராணுவத்தினர் பழிவாங்கும் நோக்குடன் குடிமக்களின் நிலைகள் மீது பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் பெரியளவில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ஈ)

## துருக்கியும் யுத்தபிரகடனம்

(அங்காரா)

துருக்கியும் ஈராக்கிற்கு எதிரான போர் பிரகடனம் செய்துள்ளது.

அதேவேளை கனடா தான் போரில் ஈடுபடுவதா இல்லையா என்பதை தீர்மானிக்க பாராளுமன்றத்தைக்கூட்டியுள்ளது.

வளைகுடாவிற்கு தனது 100 இராணுவத்தினரை அனுப்பிவைத்துள்ள அர்ஜென்ரினாவும் போரில் ஈடுபடுவது குறித்து விவாதிக்க பாராளுமன்றத்தைக் கூட்டியுள்ளது.

## பாலஸ்தீன விடுதலை இயக்கம் வன்மையான கண்டனம்

(ரியூனிஸ்)

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள தாக்குதலை பாலஸ்தீன விடுதலை இயக்கம் வன்மையாகக் கண்டனம் செய்துள்ளது.

அதேவேளை உலகெங்கிலுமுள்ள அமெரிக்க இலக்குகளைத் தாக்கும்படி பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்கு அதன் தலைமைப்பீடம் கட்டளையிட்டுள்ளது.

அத்தோடு வளைகுடாவில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை மூன்றாம் உலக நாடுகள் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும் எனவும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

## வடகொரியா, கியூபா கண்டனம்

அமெரிக்காவின் யுத்த நடவடிக்கையை ஒரு நாட்டின் ஆக்கிரமிப்பை அகற்ற வேறொரு நாட்டின் மிக மோசமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை என வடகொரியா ஜனாதிபதி கண்டித்துள்ளார்.

அதேபோன்றதொரு கண்டனத்தை கியூபாத் தலைவர் பிடல்காஸ்ரோவும் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய தலைவர் சதாம் ஹுசைன்

## மாளிகையைத் தாக்கிய விமானங்கள் சுடப்பட்டன

ஈராக் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க சண்டை விமானமொன்று ஈராக்கினால் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் விமானம் F 14 ரகத்தைச்சேர்ந்ததாகும்.

இந்த விமானமும் ஏனைய பிரெஞ்சு, பிரிட்டன் விமானங்களும் ஈராக்கிய ஜனாதிபதியின் மாளிகையைத் தாக்கியபோதே சுட்டுவீழ்த்தப்பட்டதாக அமெரிக்க வானொலி அறிவித்தது.

### குடியிருப்பு மீது தாக்குதல்

ஆயுதப் போர் தொடர்பான சர்வதேச நியமங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அமையவே தாம் தாக்குதலை மேற்கொண்டதாக வாஷிங்டன் அறிவித்துள்ளது.

ஆனால் குடியிருப்பு பகுதிகள் மீது தாக்குதலை அமெரிக்கா செய்திருப்பதாக பக்தாத் சுட்டிக் காட்டியுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆ இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.